மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: ரூ. 42.45 லட்சம் செலவில் நிறைவேற்றவேண்டுமென்று இதற்கு அரசு ஒப்புதல் அளித்திருக்கிறது.

திரு. ஆ. கு. சுப்பையா: காவிரி ஆற்றிலிருந்து தண்ணீர் எடுப்பதாக முதலமைச்சரவர்கள் கூறினார்கள். காவிரியாற்றிலிருந்து தண்ணீர் எடுப்பதன்மூலமாக அதன் பாசனப் பகுதிகள் பாதிக்கப்படாதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அவைகள் பாதிக்கப் படாத அளவுக்குத்தான் இந்தத் திட்டம் நிறைவேற்றப்படுகிறது.

*** 212 வினா—திரு. கே. எ. வகாப்**: மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வந்தவாசி குடிநீர்த் திட்டம் பூர்த்தியடைந்து விட்டதா ?

(இ) ஆம் எனில், அதற்கான மொத்தச் செலவு என்ன ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:

(அ) ஆம். பூர்த்தியடைந்துவிட்டது.

(இ) இத்திட்டத்திற்காக 1971-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் வரையில் செலவிடப்பட்ட தொகை ரூ. 18,22,661.

திரு. தொ. ப. சீனிவாசன்: தலைவர் அவர்களே, களம்பூர் பகுதியில் குடி தண்ணீர் வசதி இல்லாமல், ரேஷன் கார்டு அளித்து குடி தண்ணீர் அளிக்கக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. அதுகுறித்து குடிநீர் வாரியத்திற்கு மனுச்செய்து, குடிநீர்த் திட்டத்திற்காக 12 கோடி ரூபாய் கட்டியும் இதுவரை அதற்கான நடவடிக்கை எடுக்கவில்லை. ஆகவே, அரசு இதுகுறித்து நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மூலக் கேள்வி, 'வந்தவாசி குடிநீர்த் திட்டம்' பற்றியது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதைத் தனிக் கவனத்திற்குக் கொண்டு வந்தால் உரிய நடவடிக்கைகள் எடுப்பதற்கு வசதியாக இருக்கும்.